6th July 1962]

State Electricity Consultative Council (reconstitution)

* 165 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to reconstitute the State Electricity Consultative Council; and

(*b*) if so, when the proposal would be finalized and what the details are?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The question is under examination.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இதற்கு முன்பு நியமிக்கப்பட்டிருந்த இந்த ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டிருந்த தொழிலாளர் பிரதிநிதி அதிக எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் உள்ள தொழிற்சங்கத்திலிருந்து வந்த பிரதிநிதியா அல்லது குறைவான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் உள்ள தொழிற்சங்கத்திலிருந்து வந்த பிரதிநிதியா என்பதை அறிய வேண்டுகிறேன். குறைவான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் உள்ள சங்கத்திலிருந்து வந்த பிரதிநிதி என்றால், இனிமேல் அப்படியில்லாமல் புதிதாக அமைக்கக்கூடிய குழுவில் அதிகபட்ச தொழிலார்கள் உள்ள தொழிற்சங்கத்தின் பிரதிநிதியை அங்கத்தினராக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஒரு தொழில் தகராறு. ஒவ்வொரு யூனியனும் தங்கள் யூனியனில்தான் அதிகமான தொழிலாளர்கள் இருப்பதாக சொல்லிக்கொள்கிறார்கள். ஆகவே புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற போர்டில் ஆலோசனை கூறுவதற்கு ஒரு தொழிலாளியையே அங்கததினராக நியமிக்கலாம் என்று அரசாங்கம் யோசித்திருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டசபை அங்கத்தினர்களையும் இக்குழுவில் சேர்க்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கன்ஸல்டேஷன் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கலாம். இது பற்றி இன்னும் அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இந்த ஆலோசனை குழுவில் தொழிலாளியையே அங்கத்தினராக போடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மிகவும் நல்லது தான், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதில் அரசாங்கத்தினிடம் காக்காய் பிடிப்பவர்களாக இருக்கக்கூடியவர்களைப்பார்த்து போடக்கூடாது. அப்படியில்லாமல் சரியாக தொழிலாளர்களின் கோரிக்கைகளை தெரிவிக்கக்கூடிய தொழிலாளர்களை போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களே ஒரு தொழிற்சங்கத் தலைவர். அப்படிப்பட்டவர் தொழிலாளர்களைப்பற்றி இவ்விதம் சொல்வதைக் கேட்டால் இம்மாதிரிப்பட்ட தலைவர்களிடத்தில் தொழிலாளர்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருப்பார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. எப்படியும் தொழிலாளர்களில் ஒருவரை அங்கத்தினராக நியமிக்க வேண்டும் என்று சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

[6th July 1962

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I request the Government to have a representative of agriculturists also in the State Consultative Council?

THE HON. SRI R. VENKATARAMAN : There is provision for it.

கிராம வீட்டு வசதித் திட்டம்

* 166 கேள்வி.—திரு. டி. சின்னசாமி (திரு. கே. மூக்கையா தேவர் அவர்களின் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய அரசினரால் வகுக்கப்பட்ட கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவது குறித்து விரிவான திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றிச் சட்டம் இயற்றும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானல், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. இராம அரங்கண்ணல்: கிராம வீட்டு வசதித் திட்டத்திற்கு லைஃப் இன்ஷுரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்று வீடு கட்டிக்கொடுப்பதாகத் தெரிகிறது. இதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று இம்மாநில சர்க்காரிடம் டில்லி சர்க்கார் கேட்டிருந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்கு ஸ்டேட் ஹௌசிங் போர்ட் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்.ஐ.ஸி.-யிலிருந்து நிதி உதவியை கடனாகப் பெறுகின்றது. இதற்கு டெல்லி சர்க்காரை கேட்கவேண்டிய அவசியமே கிடையாது. மாநில சர்க்கார் கொடுக்கும் கியாரண்டியின் பேரில் ஸ்டேட் ஹௌசிங் போர்டுக்கு கொடுக்கப்படுகிறது. எவ்வளவு தொகை என்கின்ற அறிக்கை பட்ஜெட்டின் விரிவான விவாதத்தின் போது சபையில் வைக்கப்படும்.

வராகநதி (அணை கட்டுதல்)

* 166-ஏ கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் (திரு. கு. கோபால கவுண்டர் அவர்களின் சார்பாக) : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுகாவில் வராக நதியில் கட்டப்படும் அணைக்கட்டு திட்டத்தை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள உத்தேசமுண்டா?

(இ) இல்லையென்றால், ஏன்?